**தலைப்பு 204 - இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 204 இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல் | 1. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. | 2.2.1(இ) |
| | | 2. | மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதிலான குறைபாடுகள். | 2.4 |
| | | 3. | மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை. | 2.5 |
| | | 4. | பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை. | 2.1.1 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்தெனவும் | இணங்காமைகள் | 2.7 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றமை. | சொத்துக்கள் முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.3 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை தயாரிக்காமை. | 2.2.2 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தெனவும் அத்தகைய வேலைகள் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கின் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடாமை | 2.6 |

கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும்

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றாமை

(அ) மீளாய்வாண்டினுள் இந்து மக்களுக்காக ரூபா 1,319,750 தொகைக்கு சமய புத்தகங்கள் மற்றும் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான உதவிப் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவற்றின் ரூபா 830,162 பெறுமதியான புத்தக இருப்பொன்று பகிர்ந்தளிக்கப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடைகளை பகிர்ந்தளிப்பதற்காக 2017 திசெம்பர் 28 ஆந் திகதி ரூபா 2,200,000 செலவிடப்பட்டு 2,000 சேலைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஆண்டின் இறுதியில் இந்த சீருடைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் 2018 யூலை மாதத்தின் இறுதி வரையிலும் சேவைகளை பகிர்ந்தளித்தல் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் வினைத்திறனாக அடையப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்**

''நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டியதுடன், மீளாய்வாண்டிற்குரிய திணைக்களத்தினால் தமது விடய எல்லைக்குட்பட்டதான பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அறிந்திருக்க வேண்டும். எனினும், அவ்வாறு அறிந்திருக்காமையால் அதன் பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் இலக்குகளை நோக்கி அண்மிக்க வேண்டிய அடைவுகளும், இலக்குகளை அண்மித்தலை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய திணைக்களத்தினால் நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை 2018 யூலை 10 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் 2 வாகனங்கள் 02 வருட காலமாக குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(ஆ) திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் மற்றும் திணைக்களத்தின் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் 5 கட்டிடங்களில் 4 கட்டிடங்களின் உரித்து திணைக்களத்திடம் இல்லாதிருந்ததுடன், அவற்றை சுவீகரித்து மதிப்பிட்டு அவற்றை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்தினால் நடாத்திச் செல்லப்படும் வாசிகசாலையில் பெறுமதி வாய்ந்த 1069 நூல்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.4 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்**

2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 மற்றும் 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2008(I) ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கமைய அனைத்து அரச நிறுவனங்களினதும் பிரசைகள் விஞ்ஞாபனத்தை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் வேண்டும். எனினும் திணைக்களத்தினால் பிரசைகள் விஞ்ஞாபனத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 82.15 | 81.37 | 0.78 | 0.94 |
| | மூலதனம் | 110.90 | 104.86 | 6.04 | 5.45 |
| | **மொத்தம்** | **193.05** | **186.23** | **6.82** | **3.53** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **2014** | மீண்டுவருபவை | 120.66 | 118.29 | 2.37 | 1.96 |
| | மூலதனம் | 94.15 | 93.89 | 3.26 | 0.27 |
| | **மொத்தம்** | **214.81** | **212.18** | **2.63** | **1.22** |
| **2015** | மீண்டுவருபவை | 127.95 | 126.76 | 1.19 | 0.92 |
| | மூலதனம் | 94.53 | 94.37 | 0.15 | 0.16 |
| | **மொத்தம்** | **222.46** | **221.13** | **1.34** | **0.60** |
| **2016** | மீண்டுவருபவை | 139.35 | 131.70 | 7.65 | 5.49 |
| | மூலதனம் | 97.79 | 95.10 | 2.69 | 2.74 |
| | **மொத்தம்** | **237.14** | **226.80** | **10.34** | **4.35** |
| **2017** | மீண்டுவருபவை | 149.90 | 140.62 | 9.28 | 6.19 |
| | மூலதனம் | 94.65 | 94.00 | 0.65 | 0.68 |
| | **மொத்தம்** | **244.55** | **234.62** | **9.93** | **4.05** |

**(அ) ஒதுக்கீட்டு கணக்கு**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

மீளாய்வாண்டின் போது 05 செலவின விடயங்களுக்காக ரூபா 2.871 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் ரூபா 8.939 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 15 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையான வீச்சுடைய அளவானது எஞ்சியிருந்தது.

## 2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 20401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 6.00 | 5.99 | 2.50 | 3.97 | 20.00 | 11.74 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவைக் கடன் மீதிகளை அறவிட முடியாமை**

கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட இணைக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் நீங்கலாக ரூபா 40,468 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 17 முதல் 23 வருடங்களான காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்தது. அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் பணிகள் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது.

**(ஆ) இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவிடாமை**

இந்த திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 46,462 கூட்டுத்தொகையான கடன்மீதியை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கமையாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

ஏதேனுமொரு சேவைக்காக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவிற்கும் உரிய சான்றொன்று இணைக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 14 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 1,545,569.40 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களுக்காக நிதிப்பிரமாணம் 237(அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் முழுமையாகவும் சரியாகவும் நிறைவேற்றப்பட்டமைக்கான சான்றிதழும் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகைப் பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக பாராளுமன்றத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 69 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய நபரொருவருக்கான செலவினம் ரூபா 471,169 ஆக இருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 06 | 05 | 01 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 01 | - | 01 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 155 | 126 | 29 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 23 | 16 | 07 |
| | மொத்தம் | 185 | 147 | 38 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 38 வெற்றிடங்கள் நிலவியதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கோ இல்லது தேவையான முறையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.